சென்னை மெட்ரோ ரயில் சேவை

# 6 மாதத்தில் 65.50 லட்சம் பேர் பயணம்

சென்னை, மார்ச்2: கரோனா பொதுமுடக்கம் தளர்வுக்கு பின்பு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, 6 மாதத்தில் (செப்.7 முதல் பிப்.28 வரை) 65 லட்சத்து 50 ஆயிரத்து 794 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

கரோனா பொதுமுடக்கம் காரணமாக கடந்த ஆண்டு மார்ச் 4-ஆவது வாரத்தில் நிறுத்தப்பட்ட சென்னை மெட்ரோ ரயில்சேவை 5 மாதங்களுக்கு பிறகு, கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதி தொடங்கியது. முதல்கட்டமாக, விமான நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையும், இரண்டாம் கட்டமாக, பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு வழியாக சென்னை சென்ட்ரல் வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. மெட்ரோ ரயில்சேவை தொடங்கியபோது, குறைவான மக்கள் தான் பயணம் செய்தனர். இதன்பிறகு, பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. மேலும், வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே முதல்கட்ட மெட்ரோ விரிவாக்கப்பாதையில், மெட்ரோ ரயில் சேவை கடந்த பிப்ரவரி 14-ஆம் தேதி தொடங்கியது.

இதையடுத்து, மெட்ரோ ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது.

**65.50 லட்சம் பேர் பயணம்:** இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி முதல் நிகழாண்டில் பிப்ரவரி 28-ஆம் தேதி வரை 6 மாதங்களில் 65 லட்சத்து 50 ஆயிரத்து 794 பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மெட்ரோ ரயில்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ஆம்தேதி முதல் டிசம்பர் வரை 31 லட்சத்து 52 ஆயிரத்து 446 பேர் பயணம் செய்தனர். நிகழாண்டில் ஜனவரி மாதத்தில் 13 லட்சத்து 43 ஆயிரத்து 695 பேரும், பிப்ரவரி மாதத்தில் 20 லட்சத்து 2 ஆயிரத்து 653 பேரும் பயணம் செய்தனர்.

குறிப்பாக, பிப்ரவரி 14-ஆம் தேதி ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 957 பேரும், பிப்ரவரி 26 ஆம் தேதி அன்று ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 892 பேரும் பயணம் மேற்கொண்டனர்.

**க்யூ-ஆர் குறியீடு முறை:** பயணிகளின் வசதிக்காக க்யூ ஆர் குறியீடு முறை கடந்த செப்டம்பரில் தொடங்கப்பட்டது. இந்த முறையை பயன்படுத்தி, கடந்த ஆண்டு செப்டம்பர் முதல் நிகழாண்டில் பிப்ரவரி வரை மொத்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 355 பேர் பயணம் மேற்கொண்டனர். இதுபோல, பயண அட்டை பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 34 லட்சத்து 64 ஆயிரத்து 850 பேர் பயணம் செய்தனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

நிகழாண்டில் பிப்ரவரி மாதத்தில், க்யூ ஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 40,850 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயணச்சீட்டு முறையை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 9 லட்சத்து 84 ஆயிரத்து 665 பேர் பயணம் செய்துள்ளனர் என்றனர்.

